**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலம் – மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2021–2022 – 5 (ஐந்து) மாவட்டங்களில் புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் தோற்றுவித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி 1) துறை**

அரசாணை (நிலை) எண். 16

நாள் 04.03.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ, மாசி 20

படிக்கப்பட்டது :

சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.அ2/2418/2021, நாள் 16.09.2021, 24.09.2021, 14.12.2021 மற்றும் 21.12.2021.

*******

**ஆணை :–**

தமிழக சட்டமன்றப் பேரவையில் கடந்த 08.09.2021 அன்று நடைபெற்ற 2021–22–ஆம் நிதியாண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக்கோரிக்கையின் போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

அறிவிப்பு எண்.16

"சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் 1 கோடியே 75 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்."

2. அதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை சிறப்புக்கவனம் செலுத்தி நலத்திட்டங்களை உடனுக்குடன் எவ்வித தாமதமும் இல்லாமல் செயல்படுத்திட மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தினை தேவையான பணியாளர்களுடன் நிரந்தர அடிப்படையில் தோற்றுவித்து அரசாணை பிறப்பித்திடுமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்: –

1) சென்னை
2) வேலூர்
3) விழுப்புரம்
4) திருநெல்வேலி
5) கோயம்புத்தூர்

3. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில் இணைப்பு–I–இல் காணும் விவரப்படி தற்காலிக அடிப்படையில் தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர், உதவி கணக்கு அலுவலர், பதிவுரு எழுத்தர் மற்றும் ஈப்பு ஓட்டுநர் (வெளிமுகமை மூலம்) ஆகிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தை நிரந்தர அடிப்படையில் இணைப்பு–II–இல் காணும் விவரப்படி ரூ.1,75,04,040/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து நான்காயிரத்து நாற்பது மட்டும்) செலவில் தோற்றுவிப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. 2022–23–ஆம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

4. மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகம் புதிதாக தோற்றுவிக்கப்படும் 5 மாவட்டங்களில் ஏற்கெனவே இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஏற்கெனவே உள்ள சிறுபான்மையினர் நலப்பிரிவு பணியிடங்களை பிரித்து (கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்ட விவரப்படி) புதிதாக தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்துடன் இணைத்து சிறுபான்மையினர் நலத்திட்டங்களை செயல்படுத்திட ஆணையிடப்படுகிறது:–

| வ.எண் | பணியிடம் (சிறுபான்மையினர் நல பிரிவு) | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இருந்து பிரித்து மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இணைக்கப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சென்னை | வேலூர் | விழுப்புரம் | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | மொத்தம் |
| 1. | கண்காணிப்பாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 2. | உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 4. | தட்டச்சர் | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| | மொத்தம் | 4 | 4 | 4 | 4 | 4 | 20 |

5. மேற்குறிப்பிட்ட 5 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்களில், புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பூர்த்தி செய்யுமாறு ஆணையிடப்படுகிறது:–

| வ. எண் | பணியிடம் | பணியமர்த்தப்படும் முறை |
|---|---|---|
| 1. | மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நிலையில்) | 1. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தின் ஒருங்கிணைந்த பணிமூப்பின் கீழ் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நிலையில் பணிபுரியும் துறை அலுவலர்களிலிருந்து பணிமாறுதல் மூலம் பணியமர்த்தப்பட வேண்டும்.<br>2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தின் ஒருங்கிணைந்த பணிமூப்பின் கீழ் பணியாற்றும் கண்காணிப்பாளர்களில் 6 ஆண்டுகள் கண்காணிப்பாளர் பணி முடித்தவர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும். |
| 2. | உதவிக் கணக்கு அலுவலர் | கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து மாற்றுப்பணியின் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 3. | ஈப்பு ஓட்டுநர் | நடைமுறைகளில் உள்ள விதிகளை பின்பற்றி வெளிமுகமை முலம் நிரப்ப வேண்டும். |
| 4. | பதிவுரு எழுத்தர் | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தின் ஒருங்கிணைந்த பணிமூப்பின் கீழ் பணியாற்றும் அலுவலக உதவியாளர்களிலிருந்து பணி மாறுதல் (Recruitment by transfer) மூலம் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

6. மேலும் புதிய அலுவலகத்தை தோற்றுவிக்கும் நிலையில் அலுவலகத்திற்கு தேவையான ஈப்பு, கணினிகள், பிரிண்டர்கள், அறைகலன் ஆகியவற்றை இணைப்பு-III-இல் காணும் விவரப்படி வாங்கி வழங்குவதற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

7. அத்துடன், மேற்படி 5 மாவட்டங்களில் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் தோற்றுவிப்பது தொடர்பாக பின்வருமாறு ஆணையிடப்படுகிறது:-

i) புதிதாக தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலருக்கான அலுவலகத்தினை ஏற்கனவே உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் போன்று, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கட்டுப்பாட்டில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஒரு பிரிவினைத் தோற்றுவித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திலேயே இயங்கும் வகையில் அலுவலகத்திற்கான இடத்தை ஒதுக்கீடு செய்யுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ii) **<u>அலுவலக பெயர் மாற்றம் செய்தல்</u>**

மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகம் தோற்றுவிக்கப்படும் 5 மாவட்டங்களில் மட்டும் பின்வருமாறு பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்படுகிறது:-

| | |
|---|---|
| ஏற்கனவே இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் / அலுவலகம் | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் / அலுவலகம் |
| புதிதாக தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் / அலுவலகம் | மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் / அலுவலகம் |

iii) சிறுபான்மையினர் நல விடுதிகள் யாவும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கும். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பணியாற்றும் அனைத்து விடுதிப் பணியாளர்களின் ஒருங்கிணைந்த பணிமூப்பு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரால் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.

iv) புதிதாக தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டிய பொருள் தொடர்பான ஆவணங்கள், கோப்புகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள ஆணையிடப்படுகிறது,

v) மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகம் இயங்குவதற்கு தேவையான ஈப்பு, கணினி, பிரிண்டர், அறைகலன்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

vi) பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், சிறுபான்மையினர் நல இயக்ககம் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் பணியாற்றும் துறைப் பணியாளர்களுக்கு உரிய பொதுவான முதுநிலை கடந்த 13.3.1989 முதல் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் பிறப்பிக்கப்படும் அரசாணைகளின்படி பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களாலேயே தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, நிரந்தர முறையில் புதிதாக தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் பணியிடத்திற்கான நியமன முறை, தகுதிகள் ஆகியவை அடங்கிய சிறப்பு பணிவிதிகள் (Special Rules) ஏற்படுத்துவது குறித்த முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். பணி விதிகளை ஏற்படுத்தும் வரை அப்பணியிடங்களை தற்காலிகமாக (Appointment on adhoc basis) நிரப்பிடலாம்.

vii) ஏற்கனவே மாவட்ட அலுவலகங்களில் உள்ள சிறுபான்மையினர் நலப்பிரிவு பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தின் ஒருங்கிணைந்த பணிமுப்பின் கீழ் உள்ள துறைப்பணியாளர்களே முழுவதும் பணியாற்றி வருவதாலும், சிறுபான்மையினர் நலம் குறித்த திட்டங்கள் குறித்து நன்கு அறிந்துள்ளதாலும், புதிதாகத் தோற்றுவிக்கப்படும் 5 மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் பணியிடங்களையும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தின் ஒருங்கிணைந்த பணிமுப்பின் கீழ் உள்ள துறைப்பணியாளர்களைக் கொண்டு முழுமையாக நிரப்பி சிறுபான்மையினர் நலத்திட்டங்களை செயல்படுத்திட ஆணையிடப்படுகிறது.

viii) 5 மாவட்டங்களில் புதிதாக மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் தோற்றுவித்தல் தொடர்பான பணிகளை தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கண்காணித்து, சிறுபான்மையினர் நல இயக்குநர் மூலம் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ix) மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மாதாந்திர பயணத்திட்ட அறிக்கையை (Tour Diary) மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை அவர்களுக்கும் சமர்ப்பிக்க ஆணையிடப்படுகிறது.

x) புதிதாக தோற்றுவிக்கப்படும் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகம் தொடர்பான பட்டியல்களை அனுமதிக்குமாறு தொடர்புடைய மாவட்ட கருவூல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8. மேலே பத்தி 3–இல் ஆணையிடப்பட்டவாறு 5 மாவட்டங்களில் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் தோற்றுவிப்பதற்கு அடுத்த நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு கோரி கருத்துருவை தனியே அரசுக்கு அனுப்புமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை மனித வள மேலாண்மைத் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.4543/மனித வள மேலாண்மைத் (E1) துறை/2022, நாள் 16.02.2022–லும், நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல்சார்பற்ற எண்.7875/ நிதி(மை.ம.ஆ.பி)/2022, நாள் 03.03.2022–லும் பெற்று வெளியிடப்படுகிறது. PSL No.202203 PSL 0120.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–5.

இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.

ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர்,
சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (பி, மிபி(ம)சிந/மை.ம.ஆ.பி) துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத்(E1) துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/3/22
பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண். 16 , பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 04.03.2022-இன்

இணைப்பு -I

புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிட விவரம்

| வ. எண் | பதவி | புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சென்னை | வேலூர் | விழுப்புரம் | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | மொத்தம் |
| 1 | மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் Level-22 (56,100-2,05,700/-) | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 2. | உதவிக் கணக்கு அலுவலர் Level-20 (37,700-1,38,500/-) | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 3. | பதிவுரு எழுத்தர் Level-2 (15,900-58,500/-) | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 4. | ஈப்பு ஓட்டுநர் (வெளிமுகமை மூலம்) (15,000/-) | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| | மொத்தம் | 4 | 4 | 4 | 4 | 4 | 20 |

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

4/3/22
பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண். 16 , பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 04.03.2022–இன்

இணைப்பு –**II**

| வ. எண். | பொருள் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சம்பளங்கள் | 1,62,809 x 12 மாதங்கள் x 5 மாவட்டம் = 97,68,540 | – | 97,68,540 |
| 2 | அலுவலகச் செலவுகள் – தொலைபேசிக் கட்டணங்கள் | 600 x 12 x 5 = 36,000 | 2000 x 2 x 5 = 20,000 | 56,000 |
| 3 | அலுவலகச் செலவுகள் – ஏனைய சில்லறைச் செலவுகள் | 3,000 x 12 x 5 = 1,80,000 | – | 1,80,000 |
| 4 | அலுவலகச் செலவுகள் – அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு | 1,500 x 12 x 5 = 90,000 | – | 90,000 |
| 5 | அலுவலகச் செலவுகள் – அறைகலன் | – | 95,500 x 5 = 4,77,500 | 4,77,500 |
| 6 | மோட்டார் வண்டிகள் – வாங்குதல் | – | 9,50,000 x 5 = 47,50,000 | 47,50,000 |
| 7 | பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் | 120 லிட்டர் x 100 x 12 x 5 = 7,20,000 | – | 7,20,000 |
| 8 | கணினியும் துணைப்பாகங்களும் – வாங்குதல் | – | 13,00,000 | 13,00,000 |
| 9 | கணினியும் துணைப்பாகங்களும் – எழுதுபொருள் | 2700 x 12 x 5 = 1,62,000 | – | 1,62,000 |
| | **மொத்தம்** | **1,09,56,540** | **65,47,500** | **1,75,04,040** |
| (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து நான்காயிரத்து நாற்பது மட்டும்) | | | | |

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

4/3/22
பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண். 16 , பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 04.03.2022–இன்

## இணைப்பு–III

| வ. எண் | வாகனம் மற்றும் தளவாடப் பொருட்கள் விவரம் | பொருட்களின் எண்ணிக்கை | உத்தேச தொகை ரூ. | தொடரா செலவினம் ரூ. | மொத்த தொடரா செலவின விவரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | ஈப்பு (Mahindra Bolero) | 1 | 9,50,000 | 9,50,000x5 | 47,50,000 |
| 2. | மேஜை | 3 | 12,500x3= 37,500 | | |
| 3. | நாற்காலி | 5 | 6,000x5= 30,000 | 95,500x5 | 4,77,500 |
| 4. | இரும்பு அலமாரி | 2 | 14,000x2= 28,000 | | |
| 5. | தொலைபேசி | 2 | 2000 | 2000x2x5= 20,000 | 20,000 |
| 6. | கணினி | 2 | 60,000x2x5 =6,00,000 | 6,00,000 | |
| 7. | பிரிண்டர் | 2 | 20,000x2x5 =2,00,000 | 2,00,000 | |
| 8. | நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox machine – canon images runner advance 4525) | 5 | 1,00,000x5= 5,00,000 | 5,00,000 | 13,00,000 |
| | | | | மொத்தம் | 65,47,500 |
| (ரூபாய் அறுபத்தைந்து இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) | | | | | |

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

4/3/22
பிரிவு அலுவலர்